**செ. கு. எண்: 238** **நாள்: 24.12.2018**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K. பழனிசாமி**</u>

<u>அவர்களின் அறிக்கை – **24.12.2018**</u>

**திண்டுக்கல் மாவட்டம்,** குதிரையாறு அணையிலிருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, திண்டுக்கல் மாவட்டம், குதிரையாறு அணையின் பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பாசன நிலங்கள் பயன்பெறும் வகையிலும், குடிநீர் மற்றும் சமுதாய பயன்பாட்டிற்காகவும் **28.12.2018 முதல் 25.02.2019** வரை மொத்தம் 228.69 மி.க.அடி தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால், திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம் மற்றும் திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளம் வட்டத்தில் உள்ள **6113.86 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும். மேலும், விவசாயப் பெருமக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்தி, நீர் மேலாண்மை மேற்கொண்டு உயர் மகசூல் பெற வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**